Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 155

வியாழக்கிழமை
30 ஏப்ரல் 2026

சித்திரை 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
மாங்குளம் - மல்லாவி வீதியில் மோட்டார்சைக்கிளும் லொறியும் மோதி விபத்துக்கு உள்ளானதில் படுகாயம் அடைந்த குடும்பத்தலைவர் சிகிச்சை பயனளிக்காமல் உயி »11



செம்மணி மனிதப்புதைகுழியில்

# சந்தேகத்துக்குரிய மண் படுக்கைகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் சந்தேகத்துக்கு இடமான மண்படுக்கைகள் அவதானிக்கப்பட்ட நிலையில், அதற்குக் கீழ் புதைகுழிகள் இருக்க வாய்ப்புள்ளதா? என்பது தொடர்பான ஆய்வுப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. »11

## செம்மணிப் புதைகுழியில் என்புச் சிதிலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
அரியாலை செம்மணிப் புதைகுழி மீதான நேற்றைய அகழ்வுப் பணிகளின்போது, சில என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. »11

செம்மணிப் புதைகுழியின்

## வடமேற்குப் பகுதியில் என்புத்தொகுதிகள்!

அகழ்வு இன்று தொடரும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30
செம்மணிப் புதைகுழியில் நேற்று என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டதைத் தவிர, வடமேற்குப் பகுதியிலும் மேலும் சில என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததா »11

திறைசேரி மோசடி தொடர்பில்

## நாடாளுமன்றத்துக்கு தெளிவுபடுத்த முடிவு

கொழும்பு, ஏப். 30
திறைசேரியில் இடம்பெற்ற 2.5 மில்லியன் டொலர் மோசடி தொடர்பில் நாடாளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு திறைசேரியின் செயலாளர் அனுப்பி வைத்துள்ள »11

## மே 5ஆம் திகதியன்று நாடாளுமன்று கூடும்!

மே 8ஆம் திகதியன்று வியட்நாம் ஜனாதிபதி உரை

கொழும்பு, ஏப். 30
நாடாளுமன்ற அமர்வுகள் மே மாதம் 5ஆம் திகதி முதல் 8ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன. இதன் முக்கியமான அம்சமாக வியட்நாம் ஜனாதிபதி தோலாம் மே மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் »11

துப்பாக்கியால் அச்சுறுத்திய

## அர்ச்சுனா எம்.பி.க்கு நீதிமன்றம் பிணை!

எதிர்த்தரப்புப் பெண்ணும் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
துப்பாக்கிமுனையில்பெண்ணொருவருக்கு அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவை பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்தது. இந்த வழக்குடன் தொடர்புடைய பெண்ணுக்கும் நீதிமன்றம் பிணை வழங்கியது.
இளவாலை - பெரியவிளான் பகுதியில் உள்ள காணி தொடர்பாக நாடாளு »11

## மேலும் ஒரு மாதம் அவசரகாலச் சட்டம்

விரிவு
பக்கம்:- 02

## ரஷ்ய சுகாதார அமைச்சர் இலங்கைக்குப் பயணம்!

கொழும்பு, ஏப். 30
ரஷ்யாவின் சுகாதார அமைச்சர் மிகைல் முராஷ்கோ உள்ளிட்ட தூதுக்குழுவினர் மூன்று நாள்கள் பயணமாக மே மாதம் 3ஆம் திகதி இலங் »11

குற்றவியல் வழக்குகள் உள்ள


## நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா துப்பாக்கி வைத்திருக்க முடியாது!

சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ள நபர்கள் துப்பாக்கி வைத்திருக்க அனுமதி வழங்க முடியாது - இவ்வாறு சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் பெண்ணொருவரைத் துப்பாக்கி முனையில் »11

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் தொடர் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 30
பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக, இன்றும், நாளையும் தொடர் போராட்டம் »11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4416 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 32 41 50 67 |
| விசேட எழுத்து | O |

**ஹந்தஹரண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1483 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 24 50 54 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0442 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 5 6 6 1 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2522 |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 09 |
| வெற்றி இலக்கங்கள் | 03 25 60 74 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6174 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 5 8 3 5 8 1 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2204 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 09 26 40 76 |
| விசேட எழுத்து | E |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0290 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 02 29 49 |

# அவசரகால நிலைமை ஒரு மாதத்துக்கு நீடிப்பு!

கொழும்பு, ஏப்.30

**தற்போது நடைமுறையில் உள்ள பொது அவசரகால நிலைமை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.**

பொது அவசரகால நிலைமையை நீடிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியாகியுள்ள இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் சுகாதாரம், மின்சாரம், நீர், பெற்றோலிய விநியோகம் உள்ளிட்ட 15 சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

டித்வா புயலை அடுத்து நடைமுறைப்படுத்தப்பட்ட பொது அவசரகால நிலைமை நாட்டின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு நீடிக்கப்பட்டு வருகின்றது. (எ-இ)



## பதவி விலகினார் ஷம்மி சில்வா

கொழும்பு, ஏப்.30

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அவருடன் இணைந்து, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஏனைய உத்தியோகபூர்வ அதிகாரிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் தொடர்பான விவரங்கள் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே ஆகியோருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வா உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்களின் பதவி விலகலை விளையாட்டுத் துறை அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். இலங்கைக் கிரிக்கெட்டின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில், தற்காலிகமாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் நேரடிப் பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்று அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1973ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க விளையாட்டுத்துறைச் சட்டத்தின் 31 மற்றும் 34 ஆகிய பிரிவுகளின் கீழ் அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## தொலைபேசித் தொல்லைகளுக்கும் இனி சட்டநடவடிக்கை எடுக்கலாம்

கொழும்பு, ஏப்.30

டிஜிட்டல் தளங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் ஊடாக பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் தொல்லைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், சட்ட நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிததுள்ளனர்.

இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக 2024 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க தொலைத்தொடர்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ், கடும் நடவடிக்கை எடுக்க முடியும் என கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் வழக்குச் செயல்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி, சட்டத்தரணி திலன் குமார தெரிவித்துள்ளார். நியாயமான காரணமின்றி, ஒருவரை மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் நோக்கில் மீண்டும் மீண்டும் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்வது அல்லது குறுஞ்செய்திகளை அனுப்புவது தண்டனைக்குரிய குற்றமாகும். ஒருவரது தொலைபேசி இலக்கத்தை அவரது அனுமதியின்றி சமூக வலைத்தளங்களிலோ அல்லது பொது வெளியிலோ பகிர்ந்து, அவர்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்குவதும் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும். தனிப்பட்ட தகவல்களைத் தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான மிக முக்கியமான சட்டப் பாதுகாப்பாக இது அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)




## தேனிசை செல்லப்பாவுக்கு தாயகத்தில்அஞ்சலிநிகழ்வு

முல்லைத்தீவு, ஏப்.30

தமிழர்களின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் எழுச்சிப் பல நூறு பாடல்களைப் பாடி மறைந்த பாசறைப்பாணர் தேனிசை செல்லப்பாவுக்கு முல்லைத்தீவு றெட்பானா சந்திப் பகுதியில் மக்கள் அஞ்சலி செலுத்தியுள்ளார்கள். புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் அகிலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் எழுத்தாளர் யோ.புரட்சி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு அஞ்சலியுரை நிகழ்த்தினா. (ச-19)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0882 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 9 9 6 8 7 0 |

**Super Ball** DLB

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3148 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 51 57 64 77 |

**சனிதா** DLB

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 08 19 59 63 |
| வெற்றி வாரம் | 5309 |

**SASIRI** DLB

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0978 |
| வெற்றி இலக்கம் | 04 08 38 |

**லக்ன ராசி** DLB

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| | மிதுனம் |
| வெற்றி இலக்கம் | 02 16 22 62 |
| சீட்டிழுப்பு வாரம் | 4860 |

**KAPRUKA** DLB

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கம் | 20 27 39 72 |
| வெற்றி வாரம் | 2324 |

**அத கோடிபதி** DLB

| | |
|---|---|
| திகதி | 29.04.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 23 60 63 71 |
| வெற்றி வாரம் | 2974 |

## நிறைவுக்கு வந்தது அமைதி நடைபயணம்

கொழும்பு, ஏப்.30

உலக மக்களுக்குச் சமாதானச் செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்கும், பௌத்த தர்மத்தின் மரபுகளைச் சர்வதேச ரீதியாகக் கொண்டு செல்வதற்கும் இலங்கையில் 07 நாட்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட அமைதி நடைபயணம் நிறைவடைந்துள்ளது.

இந்த நடைபயணத்தில் பங்கேற்ற தேரர்கள் உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் காலை நாட்டை விட்டுப் புறப்பட்டனர். அமெரிக்காவில் வசிக்கும் வியட்நாம் நாட்டைச் சேர்ந்த பஞ்ஞாக்கர தேரர் உள்ளிட்ட பிக்குகளும், 'ஆலோகா' எனும் நாயும் ஏனையோரும் நேற்றுக் காலை 07.12 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து துருக்கியின் இஸ்தான்புல் நகர் நோக்கிப் புறப்பட்டனர். அங்கிருந்து மற்றுமொரு விமானம் மூலம் அவர்கள் அமெரிக்கா செல்லவுள்ளனர். அமைதி நடைபயணத்தின் நிறைவு அரச விழா, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போலி மின்னஞ்சல் முகவரி மூலமே 2.5 மில்லியன் டொலர் கொள்ளை

## சி.ஐ.டி.யினர் தெரிவிப்பு
## ஐவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடை

**கொழும்பு, ஏப். 30**

**இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு வள திணைக்களத்திலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, மின்னஞ்சல் ஊடுருவல் மூலம் மோசடியாகப் பரிமாற்றம் செய்யப்பட்ட விவகாரத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

மத்திய வங்கியின் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் நிதி மோசடி தொடர்பாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி சேனாரத்ன நீதிமன்றில் முதல் தகவல் அறிக்கையை நேற்றுமுன்தினம் தாக்கல் செய்தார்.

அவுஸ்திரேலிய அரச நிறுவனமான 'Export Finance Australia' பயன்படுத்திவந்த 'exportfinance.gov.au' என்ற உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு மிக நெருக்கமான வகையில், 'exportfinance.com' என்ற போலி மின்னஞ்சல் முகவரியை உருவாக்கி இந்த மோசடி செய்யப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியா வழங்கிய கடன் தவணைகளை மீளச் செலுத்தும்போது, இந்தப் போலி மின்னஞ்சல் ஊடாக வர்த்தக பற்றுச்சீட்டுகள் அனுப்பப்பட்டு, நிதிமோசடியாக வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் இணையப் பாதுகாப்பைப் பேணும் 'எனேபில்' நிறுவனம், மின்னஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை 2025 அக்டோபரிலேயே சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், அதன் பின்னரே இந்தப் பணப்பரிமாற்றம் நடந்துள்ளது. வெளிநாட்டுவளத்திணைக்களத்தின் கணினிக் கட்டமைப்பில் இருந்த முக்கியமான தரவுகள் மற்றும் மின்னஞ்சல்கள் அழிக்கப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத்திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

இந்த மோசடியுடன் தொடர்புடைய மின்னஞ்சல் முகவரியுடன் நேரடித் தொடர்பிலிருக்கும் ஐந்து பேருக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அத்துடன் கணினி அவசர உதவி அழைப்புப் பிரிவு, அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் மற்றும் கொழும்பு பல்கலைக் கழக கணினிப் பிரிவு நிபுணர்களை உள்ளடக்கிய விசேட ஆய்வுக்குழுவை அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணை அறிக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி தாக்கல் செய்யப்படவுள்ளது. (ச-இ)

# கண்டெடுக்கப்பட்ட நகை உரியவரிடம் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் வீதியில் விழுந்து கிடந்தநிலையில் கண்டெடுக்கப்பட்ட தங்கநகையைப் பொலிஸார் ஊடாக அதன் உரிமையாளரிடம் குப்பிளானைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஒப்படைத்துள்ளார். சுன்னாகம் வீதியில் தங்க ஆபரணம் ஒன்று விழுந்து கிடந்துள்ளது. அந்த வழியால் சென்ற குறித்த இளைஞர் அதனை கண்டெடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார். சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிதர்சன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த நகையின் உரிமையாளரான முதியவரிடம் மீள ஒப்படைத்தனர்.

இளைஞரின் செயலுக்குப் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ச-27)

# கைதானோரில் 19 தேரர்கள் போதைப்பொருள் பயன்பாடு!

## மருத்துவ அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஏப். 30

கட்டுநாயக்க விமானநிலையத்தில் 110 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்ட தேரர்களில் 19 பேர் போதைப்பொருள் பயன்படுத்தியிருப்பது மருத்துவப் பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் கீழ்தடுத்துவைக்கப்பட்டுள்ள அவர்களை நேற்றுமுன்தினம் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தியபோதே அவர்களில் 19 பேர் கஞ்சாப் போதைப்பொருள் பயன்படுத்தியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ச-இ)

# 'டித்வா' பாதித்தோருக்கு இடைக்கால வீடுகள்!

கொழும்பு, ஏப். 30

'டித்வா' புயலால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு மையங்கள், கூடாரங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்காக இடைக்கால வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதனடிப்படையில் கேகாலை, கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பு மையங்கள் மற்றும் கூடாரங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு, நிரந்தர வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரை இடைக்கால வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காகப் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

# பல்கலை அனுமதிக்கு விண்ணப்பங்கள்!

கொழும்பு,ஏப்.30

2025 உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், 2025/26 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் கோரப்பட்டுள்ளன. மே 19ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 2025 உயர்தரப் பெறுபேறுகளின்படி, 176,527 மாணவர்கள் பல்கலைக் கழகப் பிரவேசத்துக்கு தகுதி பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




# பாழாகலாமோ பால்..?

அரசியல்வாதியளிட்ட ஒரு வியாதி இருக்கு. எலக்சனுக்கு முதல் என்னவெல்லாம் செய்வம் எண்டு சொல்லுகினமோ அதொண்டும் செய்யமாட்டினம், ஆனால் என்னவெல்லாம் செய்யமாட்டம் எண்டு சொல்லுவினமோ அதையெல்லாம் தவறாமல் செய்வினம். இந்த வியாதி திசைகாட்டிக்காரருக்கும் தொத்தி இருக்கிறதுதான் ஆகப்பெரிய அவலம். ஏனெண்டால் இவ்வளவு காலமும் தாங்கள் தெரிவு செய்தவை சனத்தைப் பேய்க்காட்டிப் போட்டினமெண்ட கோபத்தில சும்மா கிடந்த திசைகாட்டிக்கு எங்கட சனம் வாக்குப் போட்டது. இப்ப 'ஏனடா திசைகாட்டிக்கு வாக்குப் போட்டம்?' எண்டு அதே சனங்களே தலையில அடிச்சுக் கொள்ளுற அளவுக்கு வழக்கமான அரசியல்வாதியளிட்ட உள்ள வியாதியள் எல்லாம் திசைகாட்டிக்காரருக்கு வந்திட்டுதாம். அதிலையும் வவுனியாவில ஒருத்தரும், யாழ்ப்பாணத்தில ஒருத்தரும் எல்லா விசயங்களிலையும் வலியப் போய் மூக்கை நுழைச்சு நோர்மலா முடியவேண்டிய வேலையளையும் வில்லங்கமாக்கி, இழுபறிப்பட வைக்கினமாம்.

அதிலையும் யாழ்ப்பாணத்து திசைகாட்டி எம்.பி. ஒருத்தர் தன்ர பதவியையும் பவரையும் வைச்சு தனிப்பட்ட ரீதியா கனக்க லாபம் பாக்கிறாராம்.ஏற்கனவே ஆள் ஒரு ரியூசன் ஒண்டு வைச்சிருக்குது. இப்ப அந்த ரியூசனுக்கு தன்ர அரசியல் தொடர்பை பாவிச்சு கொழும்பில இருந்து கொஞ்சம் பேமஸான ஆக்களை அந்த ரியூட்டரிக்கு வரவைச்சு, படமெடுத்து ஒண்டு மேயில்லாத அந்த ரியூட்டரிக்கு ஓசியில விளம்பரம் தேடுறார். ஆள் ஏற்கனவே பள்ளிக்கூடங்களில ரீச்சராவும், பிரின்சிப்பலாவும் இருந்ததால, கல்வித்திணைக்களத்தின்ர எல்லா விசயங்களுக்கும் அழையா விருந்தாளியா வந்து, அதுகளைக் குழப்ப நினைக்கிறார். குறிப்பா ரீச்சர்மாரின்ர இடமாற்ற விசயத்தில இந்த எம்.பி. தனித்தவில் வாசிக்கிறார். தனக்கு வேண்டப்பட்ட ஆக்களுக்கு தூர இடங்களுக்கு இடமாற்றம் வராமல் பாக்கிறதோட, அவையைக் கிட்டவா உள்ள பள்ளிக்கூடங்களுக்கு அப்பொய்ண்ட் பண்ணச் சொல்லி, கல்வித்திணைக்களக்காரருக்கு ஒரே ஆய்க்கினை. அதால ஏற்கனவே போட்ட இடமாற்ற லிஸ்டை குழப்பியடிச்சு, இன்னொரு லிஸ்ட் போடவேண்டியிருக்காம். அப்பிடி எம்.பிக்கு அணைவான ஆக்களுக்கு தூர இடத்துக்கு ட்ரான்ஸ்பரை போடாமல் விடுறதால, இடமாற்றப் பட்டியலில குளறுபடியள் வருகுதாம். அதோட சாமம் ஏமம் எண்டில்லாம அதிகாரியளுக்கு கோல் எடுத்து 'அந்த அலுவல் என்னமாதிரி? கெதியா அதை செய்து முடியுங்கோ' எண்டு வதைக்கிறாராம். அவையள் இவர் சொன்னதைச் செய்யாட்டி அதுக்கும் கோல் பண்ணி கிழிக்கிறாராம். இதால என்ன செய்யிறதெண்டு தெரியாமல் அதிகாரிமார் முழுசிக்கொண்டு நிக்கினம்.

பள்ளிக்கூடங்களில மட்டுமில்லாமல் கம்பஸிலையும் தன்ர ஆக்களைத்தான் பேரவைக்குப் போடோணும் வேலை குடுக்கேணும் எண்டு அந்த எம்.பி. விடாப்பிடியா நிக்கிறாராம். இதே திசைகாட்டிக்காரர் தான் ஊழலற்ற நாடு எண்டு முந்தி முழங்கினவை. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யிறதும் ஒருவகையில ஊழல் தானே. இப்பிடி பள்ளிக்கூடத்தில இருந்து பல்கலைக் கழகம் வரைக்கும் எல்லாத்திலையும் தங்கட பவரைப் பாவிச்சு, தங்களுக்கு அணைவான ஆக்களுக்கு மட்டும் சாதகமான விசயங்களச் செய்தால் எந்த அரசியல் பின்புலமும் இல்லாதவைக்குத்தானே பாதிப்பு? இப்பிடி தன்ர இஷ்டத்துக்கு ஆட்டம் போடுற எம்.பி.க்கு திசைகாட்டிக்காரர் கடிவாளம் போடாட்டி, அந்தக் கட்சிக்கு கெட்டபேர்வந்திடும். ஏனெண்டால் ஒருகுடம்பாலுக்குள்ள ஒரு துளி விசம் விழுந்தால் முழுப்பாலுமே பாழாப்போடும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# 'மாலைக்குள் மணம்' ஹைக்கூ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம். ஏப்.30

பிரபல பேச்சாளரும் எழுத்தாளரும் கவிஞருமான கவ்வேந்தர் பொன். சுகந்தனின் 'மாலைக்குள் மணம்' என்னும் இரண்டாவது ஹைக்கூ கவிதை நூல் வெளியீட்டு விழா இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக முன்னாள் இந்துநாகரிகத்துறை தலைவரும் பேராசிரியருமான மா.வேதநாதன் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை இலங்கைத் திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பாலமுரளி பெற்றுக்கொண்டார். (ச)

# வில்லூன்றித் தீர்த்தக்கரையில் சித்திராப் பூரணை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.30

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திராப் பூரணை நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறவுள்ளது.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். காலை 8 மணிக்கு வில்லூன்றிப் புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தேரேறி வருகிறாள் தேவி காமாட்சி அம்பிகை!

அடியார்களின் குறை தீர்த்து நிறைவாழ்வையளித்தருளும் நாச்சிமார் கோவில் எனப்போற்றப்படும் குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

அன்னை காமாட்சி, விநாயகர் மற்றும் சுப்பிரமணிய சுவாமி சகிதமாக அலங்கார பூஜிதையாகத் தேரில் எழுந்தருளி திருவீதி வலம் வருகிறாள்.

கருணை மிகுந்த காமாட்சியாகவும், வீரம் செறிந்த காளி மூர்த்தமாகவும் அன்னை இங்கே அருள்பாலிக்கிறாள்.

வாழ்த்தவாயும் நினைக்க மட நெஞ்சுரு தாழ்த்தன்னி சென்னியும் தர்த்தனிப் பெரும் தளிர் மேனித் தேவியாக அம்பிகை காமாட்சி இங்கே குடியேறி அமர்ந்து ஆதி பராசக்தியான அம்பிகையாக அடியார் பெருமக்களுக்கு அருட்காட்சி தருகின்ற அழகே தனி. கருணையுள்ளம் கொண்ட ஸ்ரீ காமாட்சி அம்பிகையானவள் தம்மை நம்பிக் கைதொழும் அடியவர்களை ஒரு போதும் கைவிடமாட்டாள்.

"அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்" உலகைக் காக்கும் அன்னையின் தேர்த்திருவிழாவைக் கண்டு தரிசித்து, அவளது அருளைப் பெறுவோம்.

● கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்



# வயாவிளான் மத்திய கல்லூரி துடுப்பாட்டத்தில் சம்பியன்!

யாழ்ப்பாணம், ஏப்.30

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத்தொடரில், வயாவிளான் மத்திய கல்லூரி அணி வலய சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியுள்ளது. முதலாவது காலிறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்கொண்ட வயாவிளான் மத்திய கல்லூரி அணி வெற்றியைத் தன்வசமாக்கியது. அரையிறுதிப் போட்டியில் மூளாய் சிவப்பிரகாசா கல்லூரி அணியுடன் மோதி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியுடன் மோதி வலய மட்ட சம்பியனாக வயாவிளான் மத்திய கல்லூரி அணி மகுடம் சூடியது. (ச)

# தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம். 30

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி திருக்கோயில் மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார். மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும்.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும்வாய்ப்புஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாகமுடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியை செய்து கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேச்சில் பொறுமை அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கக்கூடும்.

**கடகம்:** இன்று அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும்போது பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கும்பம்:** வீண்செலவுகள் ஏற்படக்கூடும். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்துவிடுவது நல்லது. வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். சிலருக்குத் திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# அல்லற்படும் அளவீடு..!

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமித்த காணிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த அளவீட்டுப் பணிகள் தொடர்ச்சியான குழப்பங்கள் மற்றும் புரிதலற்ற தன்மைகள் காரணமாக மீண்டும் ஒருதடவை கைவிடப்பட்டுள்ளன. விடுவிப்புக்காக அல்லாமல், வேறு நோக்கத்துக்காகவே காணிகள் அளவிடப்படுகின்றன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சந்தேகம் வெளியிட்ட நிலையில், அதைத் தொடர்ந்து காணிகளின் உரிமையாளர்களிடம் ஏற்பட்டிருந்த குழப்பங்களும், ஒத்துழைப்பின்மையுமே அளவீட்டுப் பணிகள் கைவிடப்படக் காரணமாக அமைந்துள்ளன.


தமது காணிகள் தம்மிடம் வழங்கப்பட வேண்டும். அவை அபகரிக்கப்படக் கூடாது என்பதில் காணிகளின் உரிமையாளர்களான மக்கள் மிகுந்த அக்கறையை வெளிப்படுத்தவே செய்வார்கள். எனவே, இந்த விடயத்தில் பொதுமக்களுக்கு இருக்கும் பயமும், தயக்கமும் நியாயமானவை. கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான அனுபவங்கள் அச்சமேலீட்டை அவர்களுக்கு ஏற்படுத்தவே செய்யும். எனவே, 'காணிகளின் உரிமையாளர்கள் ஒத்துழைக்கவில்லை' என்று ஒரே வார்த்தையில் இந்த விடயத்தை கடந்துவிட முடியாது. மாறாக, அவர்களுக்கு முறையானதும், உறுதியானதுமான உத்தரவாதம் வழங்கப்பட்டதா? என்ற பரிசீலனை தான் தற்போது அவசியமாகின்றது. 'காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நோக்கில் இந்த அளவீட்டுப் பணிகள் இடம்பெறுகின்றன' என்றவாறான உத்தரவாதத்தைக் காணிகளின் உரிமையாளர்கள் கோரிய போதிலும், 'அமைச்சு மட்டத்தில் இடம்பெறும் கலந்துரையாடலின் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்ற சொற்தொடரைப் பயன்படுத்தியே அவர்களுக்கு உத்தரவாதம் (கடிதம்) வழங்கப்பட்டுள்ளது. எனவே, அமைச்சுமட்டக் கலந்துரையாடல் தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக அந்தக் காணிகளை ஆக்கிரமிப்பதாகவோ அல்லது பதில் காணிகளை வழங்குவதாகவோ இருந்தால், அதற்கு யார் பொறுப்பு?

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவித்து, அந்தக் காணிகளைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்றுதான் மக்கள் கோருகின்றனர். அதற்குப் பதிலாக மாற்றுக் காணிகள் வழங்கப்பட வேண்டும் என்றோ அல்லது இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவோ மக்கள் கோரவில்லை. மக்களின் நிலைப்பாடு தெளிவானது மற்றும் உறுதியானது. எனவே, வாய்மொழிமூல அறிக்கைகளை விடுத்து, 'காணிகளை அவற்றின் உரிமையாளர்களிரிடம் ஒப்படைக்கும் நோக்கில் தான் அளவீடுகள் இடம்பெறுகின்றன' என்ற உத்தரவாதங்கள் துறைசார் அமைச்சு மட்டத்தில் முறைப்படி வழங்கப்படவேண்டும்.

மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுரவும், பிரதமர் ஹரிணியும், அரசாங்கத்தின் இன்னும் சில பிரதானிகளும் பலமுறை கூறியுள்ளனர். தையிட்டி திஸ்ஸ விகாரைக் காணிகள் மக்களுடையவை. அவை மக்களிடமே வழங்கப்படும் என்று அமைச்சர் சந்திரசேகரும் தெரிவித்திருக்கின்றார். எனவே, வாய்மொழிமூல இந்த உத்தரவாதங்களை, மக்களுக்கு நம்பிக்கை வரக்கூடிய, அவர்களுக்கு சட்டப் பிடிமானமொன்று ஏற்படக்கூடிய எழுத்துமூலமான உத்தரவாதமாக வழங்குவதில் என்ன பிரச்சினை? அத்தகைய உத்தர வாதமொன்றை மக்கள் எதிர்பார்ப்பதில் என்ன தவறு?

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று**

**பொருள்:** இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைவிட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.




## மின்சாரக் கட்டண அதிகரிப்பு செலவு மதிப்பீடு சமர்ப்பிப்பு!

கொழும்பு, ஏப். 30

**எரிபொருள் விலையேற்றத்தைக் கருத்திற்கொண்டு, இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டுக்கான மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பான முன்மொழிவு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

மின்சார உற்பத்திக்கான திருத்தப்பட்ட செலவு மதிப்பீட்டை, தேசிய முறைமை செயற்பாட்டாளர் தனியார் நிறுவனம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்கியுள்ளது.

தற்போது நிலவும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு ஏற்ப, மின்சார உற்பத்திச் செலவுகளும் அதிகரித்துள்ளதால், மின்சாரக் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உலகளாவிய மற்றும் உள்ளூர் ரீதியாக எரிபொருள் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மின்சாரஉற்பத்திச் செலவை நேரடியாகப் பாதித்துள்ளமையே இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த மதிப்பீடுகளைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு விரிவாக ஆய்வுசெய்யும். இதன்படி, எதிர்வரும் மாதங்களில் மின்சாரக் கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

## கட்டுப்பாட்டை இழந்து வீட்டுக்குள் புகுந்த பஸ்

கொழும்பு, ஏப். 30

மொரட்டுவையிலிருந்து பாணந்துறை நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்றின் சாரதிக்கு திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக, பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபக்கத்துக்குத் தாவி அங்கிருந்த வீடொன்றின் மீது மோதி நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் பேருந்திலிருந்த எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை. இருப்பினும், வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது பேருந்து மோதியதில், அதில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)





## சந்திரசேனவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப். 30

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை மேலும் விளக்க மறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்காக எயார் பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்தபோது, இடைத்தரகர்கள் ஊடாக மில்லியன் கணக்கான டொலரை இலஞ்சமாகப் பெற்றதாகக் கபில சந்திரசேன மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)



## அதிக விலைக்கு அரிசி ரூ.2 இலட்சம் அபராதம்

கொழும்பு, ஏப். 30

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு சம்பா அரிசியை விற்பனை செய்த கொழும்பு பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு நீதிமன்றம் 2 இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கொழும்பு வர்த்தக நிலையம் ஒன்றில் நுகர்வோர் விவகார அதிகாரசபையினர் திடீர் சோதனையை மேற்கொண்டபோது, ஒரு கிலோகிராம் 240 ரூபா என நிர்ணயிக்கப்பட்ட சம்பா அரிசி அதிக விலைக்கு விற்கப்பட்டமை கண்டறியப்பட்டது.

இதுதொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த வர்த்தகர் இதற்கு முன்னரும் இவ்வாறான குற்றங்களுக்காக இரண்டு முறை தண்டிக்கப்பட்டவர் என்பது விசாரணையில் தெரியவந்தது.

அதற்கமைய குற்றத்தை ஒப்புக்கொண்ட வர்த்தகருக்கு 2 இலட்சம் ரூபா அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-இ)

**நாளை** வெள்ளிக்கிழமை- சித்திரை 18
01.05.2026
சுபநேரம் : 06.00 – 07.30
ராகுகாலம் : 10.30 – 12.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வலிகாமம் வலய கரப்பந்தாட்டப் போட்டி சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி சம்பியன்!

யாழ்ப்பாணம், ஏப். 30
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில், 16 வயதுக் குட்பட்ட பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி சம்பியன் வென்றுள்ளது. இந்தப் போட்டி கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
16 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான இறுதிப் போட்டியில், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணியும் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. இதில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணியை வீழ்த்தி வெற்றிபெற்றது. (ச-63)




# 'நல்லூர் நாதம்' இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 30
நல்லூர்ப் பிரதேசசபையின் 'நல்லூர் நாதம்' இதழ் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நல்லூர்ப் பிரதேசசபை மண்டபத்தில் நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தலைமையில் இடம்பெற்றது.
நல்லூர் நாதம் இதழினை நல்லூர்ப் பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி. கௌரி முகுந்தன் வெளியீடு செய்து வைக்க நல்லூர்ப் பிரதேச சபை உறுப்பினர் தியாகமூர்த்தி, பிரதேச சபை உறுப்பினர் ஸ்ரீகணேசா, நல்லூர்ப் பிரதேச சபையின் செயலாளர் ஜெலீபன் ஆகியோர் இணைந்து முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டனர்.
நல்லூர் நாதத்தின் முதல் இதழான ஏப்ரல் மாத இதழ் நல்லூர்ப் பிரதேச சபையின் கடந்த காலச் செயற்பாடுகளைக் கொண்டதாக வெளிவந்துள்ளது. (ச-66)

# சிவராம், ரஜீவர்மனின் நினைவுதினம் அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 30
ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் கொடுத்து, தமது இன்னுயிரைத் தியாகம் செய்த ஊடகவியலாளர்களான தராக்கி சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.
தராக்கி சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி கொழும்பில் நாடாளுமன்றத்துக்கு அருகில் வைத்து கடத்தப்பட்டுச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். செல்வராஜா ரஜீவர்மன் கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி யாழ். நகரப் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த இரண்டு படுகொலைகளும் அரச படைகளின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளிலேயே இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-20)





# 108 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மன்னார் டச்சுக் கோட்டை புனரமைப்பு

மன்னார், ஏப். 30
மன்னார் மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க அடையாளமான மன்னார் டச்சுக் கோட்டையை வரலாற்றுத் தொன்மை மாறாமல் புனரமைத்து, அதனை ஒரு நவீன சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
சிதைவடைந்து வரும் மன்னார் டச்சுக் கோட்டையின் தற்போதைய நிலைமைகளை ஆராய்ந்து, அதன் வரலாற்றுத் தொன்மையை பாதுகாக்கும் நோக்கில் வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்டனர்.
கோட்டையைப் புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 108 மில்லியன் ரூபா மதிப்பிலான திட்டத்தை எவ்வித தாமதமுமின்றி விரைவாக நிறைவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கோட்டையின் வரலாற்று ரீதியான தனித்துவம் சிதையாத வகையில், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் திருத்தப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.
சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் அவசியம் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. வரலாற்றுத் தலங்களை முறையாகப் பராமரிப்பதன் மூலம் மன்னார் மாவட்டத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதுடன், உள்ளூர் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என வலியுறுத்தப்பட்டது.
இந்தக் களவிஜயத்தில் வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர், தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு கோட்டையின் பகுதிகளைப் பார்வையிட்டனர். (ச-56)



# வீட்டுத்திட்ட வீடு கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
தென்மராட்சி, மீசாலை கிழக்கு பிரதேசத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் அடிக்கல் நடப்பட்ட புதிய வீடு நேற்றுமுன்தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.
கடந்த ஜனவரியில் மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்டு 30 வீட்டுத் திட்டங்களுக்கான காசோலைகளை வழங்கியிருந்தார். அதன் ஓர் அங்கமாக மீசாலை கிழக்கில் 20 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப் படவிருந்த வீட்டுக்கான அடிக்கல்லையும் ஜனாதிபதி நட்டுவைத்திருந்தார்.
நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டு வீட்டைத் திறந்து வைத்தனர். நிகழ்வில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோர் வீட்டை உரிமையாளர்களிடம் கையளித்தனர். (ச-27-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






## யாழ்.போதனாவில் ஓவியப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ்.போதனா மருத்துவமனை உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு, ஓவியம் யாரும் வரையலாம் எனும் தலைப்பிலான ஓவியம் வரைதல் பயிற்சி,யாழ். போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அமெரிக்காவிலிருந்து வந்துள்ள சன் சுந்தரம் வளவாளராகப் பங்கேற்று ஓவியப்பயிற்சியையும், வழிகாட்டுதலையும் வழங்கினார். இதில் நூற்றுக்கணக்கானவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, தங்களின் சிந்தனை, உணர்வு, கற்பனை ஆகியவற்றை அழகான ஓவியங்களாக வெளிப்படுத்தினர். (க -66)

## மாணவர்களுக்கு தேவாரப்போட்டி



முல்லைத்தீவு, ஏப்.30

புதுக்குடியிருப்புப் பிரதேச இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில், புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள அனைத்துஅறநெறிப்பாடசாலைகளுக்குமான தேவாரப்போட்டி, உடையார்கட்டு ஸ்ரீமுருகன் அறநெறிப்பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. இதில் 22 அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் போட்டியாளர்களாகப் பங்கேற்றனர். சமயகுரவர்கள் நால்வரின் திருவுருவப்படங்களுக்கு மாலை அணிவித்து தீப ஆராதனைகள் இடம்பெற்ற பின்னர், அறநெறிக்கீதம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து தேவாரம் ஓதுதல் மற்றும் தேவாரத்தை வரிக்கிரமமாக எழுதுதல் போட்டி என்பனவும் நடத்தப்பட்டன. (க-19)

## பூந்தண்டிகையில் வல்வை முத்துமாரி



யாழ்ப்பாண[illegible]

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழாவின் பத்தாம் நாள் இரவு உற்சவமான பூந்தண்டிகைத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. அபிஷேகம் மற்றும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து முத்துமாரி அம்மன் உள்வீதி சுற்றி வந்து விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகை (பல்லக்கு) வாகனத்தில் எழுந்தருளி வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர். (க-100)



## உதவிப் பங்குத்தந்தைக்கு பேசாலையில் பிரியாவிடை

மன்னார், ஏப்.30

கடந்த 10 மாதங்களுக்கு மேலாக மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயப் பங்கின், உதவிப் பங்குத்தந்தையாக தனது இறைபணியை மேற்கொண்ட அருட்பணி அன்ரன் சிம்ப்சன் குரூஸ் அடிகளாருக்கு, பேசாலைபுனித வெற்றி அன்னை ஆலயப் பங்கு சமூகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரியாவிடை நிகழ்வு நடத்தப்பட்டது. இவர் பள்ளிமுனை புனித லூசியா ஆலய உதவி பங்குத்தந்தையாக மாற்றலாகிச் செல்கின்றார். அதேவேளை புதிய உதவிப் பங்குத்தந்தை நேற்றுமுன்தினம் பொறுப்பை ஏற்றுக்கொண்டதுடன், அவருக்கும் வரவேற்பளிக்கப்பட்டது. (க-60)

## 61 குடும்பங்களுக்கு அரிசிப்பொதிகள்



முல்லைத்தீவு, ஏப்.30

நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம் பெறுவோம் செயற்றிட்டத்தின் 74ஆவது கட்டத்தில் 61 குடும்பங்களுக்கு அரிசிப்பொதிகள் வழங்கப்பட்டன. புதுக்குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரது மக்கள் தொடர்பகத்தில் வைத்து பொதிகள் வழங்கப்பட்டன. குறுங்கால வாழ்வுடமை ஊக்குவிப்பு நோக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 4 ஆயிரத்து 19 குடும்பங்களுக்கு இந்தத் திட்டத்தின் ஊடாக உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-246)


## நெல் மாபியாக்களைத் தடுக்க கூட்டுறவுச் சங்கங்களால் முடியும்!

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.30

மணல் மாபியாவைப் போலவே நெல் சந்தையிலும் மாபியாக்கள் செயற்படுகின்றன. இவர்கள் விவசாயிகளிடமிருந்து மிகக்குறைந்த விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்து, அதனைப் பதுக்கி வைத்து, மக்களுக்கு அதிக விலைக்கு அரிசியாக விற்பனை செய்கின்றனர். இந்தச் சுரண்டலைத் தடுக்க இடைத்தரகர்களற்ற ஒரு பொறிமுறை அவசியமாகும். குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்கள் பலமாகும்போது, இந்த மாபியாக்களைக் கட்டுப்படுத்தமுடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். துணுக்காய், கோட்டைகட்டிய குளத்தில் இடம்பெற்ற நெல் நடுகை இயந்திரத் தொடக்க விழாவில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விவசாயிகளிடமிருந்து நெல்லை நியாயமான விலைக்குக் கொள்வனவு செய்யவும், மக்களுக்கு மலிவு விலையில் அரிசியை வழங்கவும் கூட்டுறவுச் சங்கங்களாலேயே முடியும். கூட்டுறவுச் சங்கங்கள் பலமாகும்போது இந்த மாபியாக்களைக் கட்டுப்படுத்த முடியும். கடந்த காலங்களில் மாபியாக்களுக்குப் பின்னால் அரசியல்வாதிகள் இருந்தனர். ஆனால் இன்றைய அரசாங்கம் மாபியாக்களை ஒடுக்குவதற்கு முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றது. வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு மத்திய அமைச்சர்கள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றனர். இந்தச் சாதகமான அரசியல் சூழலை விவசாயிகள் மற்றும் கூட்டுறவுத்துறையினர் சரியாகப் பயன்படுத்தி மாகாணத்தை மேம்படுத்த முன்வரவேண்டும்-என்றார். (க-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவ கால (2026.05.31 -2026.06.02) வாகனத்தரிப்பிடங்களை குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏல அறிவித்தல் -2026

ஏலம் கூறப்படும் இடம் :- கரைதுறைப்பற்று பிரதேசசபை
ஏலம் கூறப்படும் நாள் :- 11.05.2026 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணி

**வாகனத்தரிப்பிட ஏல விபரம்**

| தொ .இல | வாகன வகை | நாளொன்றுக்கு அறவிடவேண்டிய தொகை | ஆகக் குறைந்த ஏலம் கூறும் தொகை | செலுத்த வேண்டிய பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | துவிச்சக்கர வண்டி<br>மோட்டார் சைக்கிள் | 50.00<br>100.00 | | |
| 02 | முச்சக்கர வண்டி | 150.00 | **572,000.00** | **50,000.00** |
| 03 | கார் | 200.00 | | |
| 04. | ஏனைய மோட்டார் வண்டி<br>பஸ்,பார ஊர்தி | 300.00 | | |

**ஏலத்தில் பங்குபற்றுவதற்கான நிபந்தனைகள்**

1. ஏலத்தில் பங்குபற்றுவோர் மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 2000.00 இனை செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.(குறித்த தினத்தில், குறித்த இடத்தில் மு.ப 8.30 தொடக்கம் 10.30 மணி வரை பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளலாம்).
2. 2026.05.31 - 2026.06.02 ஆம் திகதிகளில் மட்டுமே ஆலய சுற்றாடலில் சபையால் இனங்காட்டப்படும் இடங்களில் வாகனத்தரிப்பிடங்களுக்கான கட்டணங்களை அறவிட முடியும்.
3. சபையில் தவறுனர் பட்டியலில் உள்ளவர்கள் ஏலத்தில் பங்குபற்ற தகுதியற்றவராவார்.
4. வாகனத்தரிப்பிடங்கள் தொடர்பான நட்டங்களுக்கு பிரதேச சபையில் இழப்பீடு எதுவும் கோர முடியாது.
5. ஏலத்தில் தெரிவு செய்யப்படுவோராலேயே வாகனத்தரிப்பிடத்திற்கான வெளிச்சமூட்டல். பாதுகாப்பு வேலி என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. ஏலத்தில் தெரிவுசெய்யப்படுவோராலேயே வாகனத்தரிப்பிடத்திற்கான தரிப்பிட கட்டணங்களுக்கான பற்றுச்சீட்டுக்களை தமது செலவிலேயே அச்சிடல் வேண்டும் என்பதுடன் பற்றுச்சீட்டுக்களின் அடிக்கட்டையினை சபையிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
7. ஏலத்தில் தெரிவுசெய்யப்படுவோர் ஏலத்தொகையினை குறித்த இடத்திலேயே செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக ரூபா 25.00 முத்திரையுடன் சமூகமளித்து உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும்.
8. ஏலத்தில் பங்குபற்றுவோர் கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பதென்பதை உறுதிப்படுத்துவதற்கு, கிராமசேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதியையும் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

தவிசாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.
30.04.2026

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.30
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக மகாபாரத தொடர் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல்10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் சைவப்புலவர் இரா. செல்வவடிவேல் கலந்து கொண்டு மகாபாரதம் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு ஆற்றுவார். (ச-66)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கம்பனி ஒன்றிற்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 104 3403

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
வியாபார முகாமைத்துவமாணிப் பட்டப்படிப்பு - 2024/2025 - 16 ம் அணி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற வியாபார முகாமைத்துவ மாணிப் பட்டப்படிப்பு - 2024 / 2025 கற்கை நெறிக்குத் தகுதியான விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 15.05.2026
மேலதிக விபரங்களுக்கு :- www.codl.jfn.ac.lk

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
30.04.2026

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 06 . 1958
மறைவு 27 . 04 . 2026

## வசந்தகுமார் விஜயலட்சுமி

இல.21, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட வசந்தகுமார் விஜயலட்சுமி கடந்த 27.04.2026 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வசந்தகுமாரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான அருளானந்தம், மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நிர்மலா, சர்மிளா, ஜமிலா, காலஞ்சென்றவர்களான சகுந்தலா, மோகனகுமார் மற்றும் வினித்தா, பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனியும் பவதாரணியின் பெரியம்மாவும், விஜயராமின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.21, சட்டநாதர் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



பிறப்பு 14 . 01 . 1952
இறப்பு 29 . 04 . 2026

## அந்தோனிப்பிள்ளை கெலன் ஜெசி (ராஜினி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை கெலன் ஜெசி (ராஜினி) அவர்கள் நேற்று (29.04.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்ஷல் - றோசலீன் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஜோண் அருளப்பு - ஞானமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், அந்தோனிப்பிள்ளை (ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர், பெற்றோலிய கூட்டுத்தாபனம் - இலங்கை) அவர்களின் அன்பு மனைவியும், அன்சன் சதீஸ் (முகாமையாளர், மக்கள் வங்கி - சுன்னாகம்), றொய்ஸ்ரன் மனோஜ் (கனடா), நிஷாந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், செறின் சர்மிலா (ஆசிரியர் - யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்), பேர்ளினா (கனடா), சுரேந்திரன் (பிராந்திய மேற்பார்வையாளர், பெற்றோலிய கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரெபான் அர்வின், சர்வின், பிரவீனா, ஜொனத்தன், அபிஷனா, கெலனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான லோறன்ஸ், கிளிபேட், ஸ்ரெலா (சந்திரா), அருளானந்தம் (அரியராசா), கிப்பொலிற்றா (சறோ) மற்றும் அன்ரனி (நெல்சன்), புளோரா (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான G.S. மரியதாசன், எட்வேட், வயலற் கொன்சி மற்றும் மகேஸ்வரி, ரஞ்சினி, J.A.மரியதாசன், திரேசா (கனி), ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ் றக்கா வீதியில் அமைந்துள்ள புனித திரேசாள் ஆலயத்தில் இன்று (30.04.2026) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 360 4587**
**077 254 6060**
**+1 (647) 669 - 6735**

**71, [illegible]ன் தோட்டம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cs 61331) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு நாட்டு மீனவர்கள் உறவை சீர்குலைப்பதற்குச் சதிச்செயல்!

## சிவில் அமைப்பு சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஏப்.30**

**யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் தமிழக மீனவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் இரு நாட்டு மீனவர்களிடையே வன்முறையைத் தூண்டும் செயலாகும் என்று மன்னார் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.**

மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மீனவர்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த மீனவர் கடற்கொள்ளையராகவே இருந்தாலும், அவரைப் பிடித்துச் சட்டத்தின் முன் ஒப்படைப்பதே முறையான வழி. அதை விடுத்து, சக மீனவர்களே தண்டனை வழங்குவது மனிதாபிமானமற்றது.

இரு நாடுகளுக்கு இடையே நிலவும் ராஜதந்திர உறவுகளை மதித்து, இவ்வாறான விவகாரங்களை நீதிமன்றங்கள் ஊடாகவே கையாள வேண்டும். இத்தகைய செயல்கள் இலங்கை மற்றும் தமிழக மீனவர்களுக்கு இடையே வன்முறைகள் முரண்பாடுகளை வளர்க்கும். இது எதிர்காலத்தில் கடலில் இரு தரப்புக்கும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும்- என்றனர். (ச-56)

# பணியாளர்களுக்கு வெள்ளி விடுமுறை

சாவகச்சேரி,ஏப்.30


சித்திரா பௌர்ணமி மற்றும் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நாளை மறுதினம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அன்றைய தினம் வணிக மற்றும் தொழில் நிலையங்களை மூடி பணியாளர்களுக்கு விடுமுறை வழங்குமாறு மன்றத் தலைவர் மு.அகிலன் வணிக நிலையங்களுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (க-9)

# நிரந்தர நியமனத்துக்கான சுற்றறிக்கைக்கு அனுமதி

கொழும்பு, ஏப்.30

அரச நிறுவனங்களில் தற்காலிக, பதிலீடு, ஒப்பந்தம் அல்லது நிவாரண அடிப்படையில் பணியாற்றும் சுமார் 9,800 ஊழியர்களை நிரந்தரமாக பணியமர்த்துவதற்கான சுற்றறிக்கை வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்வேறு அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் நீண்டகாலமாக நிரந்தர நியமனங்கள் இன்றி பணியாற்றி வந்த சுமார் 9,800 ஊழியர்களுக்கு இந்தத் தீர்மானத்தின் ஊடாக நிவாரணம் கிடைக்கவுள்ளது.(எ-இ)



பொலிகண்டி பாரதி முன்பள்ளிச் சிறுவர்களின், வருடாந்த சிறுவர் சந்தை , முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (க-100)

# முன்னாள் சிப்பாய் கைக்குண்டுடன் கைது!

கொழும்பு, ஏப்.30

எட்டவீரகொல்லேவ, கோன்கொல்லேவ பிரதேசத்தில் கைக்குண்டு மற்றும் தோட்டாக்களுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


கைதுசெய்யப்பட்டவர் எட்டவீரகொல்லேவப் பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாய் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# மீனவர் மீதான தாக்குதல் ஏற்றுக்கொள்ள முடியாதது

## நாமல் ராஜபக்ச கண்டனம்

கொழும்பு, ஏப்.30



தமிழகத்தைச் சேர்ந்த
கைத் கடற்றொழிலா
தாக்கப்பட்ட காட்சிகள்
றன என்றும், இது
செயல்கள் ஏற்றுக்
வும் நாடாளுமன்ற
பக்ச தெரிவித்
தமிழக கடற்றொழி
கடற்றொழிலாளர் ஒரு
யில் தாக்கப்பட்ட
எக்ஸ் தளத்தில் பகிர்ந்
தொடர்பில் தனது

மீனவர்களால் இலங்
ளர் ஒருவர் கொடூரமாகத்
மிகுந்த கவலையளிக்கின்
போன்ற வன்முறைச்
கொள்ள முடியாதவை என
உறுப்பினர் நாமல் ராஜ
துள்ளார்.

லாளர்களால் இலங்கை
வர் கொடூரமான முறை
புகைப்படத்தை தனது
துள்ள அவர், இச்சம்பவம்
கடும் கண்டனத்தைப்

பதிவு செய்துள்ளார். பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், அவரைப் பாதுகாப்பாக நாட்டிற்கு அழைத்து வருவதற்கும் இலங்கை அரசாங்கம் உடனடியாகத் தலையிட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக அரசியல்வாதிகள், இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்துவதில் கைதேர்ந்தவர்கள். ஆனால், தமிழக மண்ணில், தமிழகக் காவல்துறையினர் முன்னிலையில் இலங்கை கடற்றொழிலாளர் தாக்கப்பட்டபோது மௌனம் காக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நமது கடற்றொழிலாளர்களை சிறப்பாகப் பாதுகாக்க, வலுவான எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தேவை என்பதை இந்தச் சம்பவம் அவசரமாக வலியுறுத்துகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-இ)


## மரண அறிவித்தல்

பிறப்பு
06 . 09 . 1942

இறப்பு
29 . 04 . 2026



### திருமதி சடாட்சரம் திலகவதி

**(சுருக்கெழுத்தாளர், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளர்)**

காலியை பிறப்பிடமாகவும், கொழும்பு, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சடாட்சரம் திலகவதி (சுருக்கெழுத்தாளர், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளர்) அவர்கள் நேற்று (29.04.2026) புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாப்பாணசிங்கம் - செல்லம்மா தம்பதியரின் கனிஸ்ர புத்திரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - அமுதம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இரத்தினம் சடாட்சரம் (உணவுத் திணைக்கள அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி லதா கண்ணன் (ஆங்கில பாட ஆசிரியர், யா/யாழ்ற்ரன் கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும், காங்கேயநாதன் கண்ணன் (பேராசிரியர், கணித புள்ளிவிபரவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம் மற்றும் வவுனியாப் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மாமியாரும், பவித்திரன் (மருத்துவபீடம், 3ம் வருடம், கொழும்பு பல்கலைக்கழகம்), நிருயனா, திவியனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற சண்முகவடிவேல், காலஞ்சென்ற இராசதுரை, காலஞ்சென்ற தேவரட்ணம், அமிர்தவதி, காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற புவனேஸ்வரியம்மா மற்றும் செல்வராணி, காலஞ்சென்ற வர்ணகுலவதி மற்றும் ஞானரத்தினம், காலஞ்சென்ற சிவகுருநாதன், தங்கவாகனம், காலஞ்சென்ற தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CB 47466)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிணற்றுக்குள் இருந்து முதியவரின் சடலம் மீட்பு

வவுனியா, ஏப். 30

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து முதியவர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா-தோணிக்கல் சேக்கிழார் வீதியைச் சேர்ந்த 64 வயதுடைய முதியவரே இவ்வாறு சடலமாகமீட்கப்பட்டவராவார். குறித்த முதியவரை நீண்ட நேரமாகக் காணாத நிலையில், உறவினர்கள் தேடுதல் மேற்கொண்ட போதே அவர் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)

# மோட்டார்சைக்கிளில் திடீரெனப் பற்றிய தீ

வவுனியா, ஏப். 30



வவுனியா, ஏ9 வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார்சைக்கிள் திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது. வவுனியா நகரப் பகுதியில் இருந்து புறப்பட்ட அந்த மோட்டார்சைக்கிள், தாண்டிக்குளம் முருகன் கோவிலை அண்மித்தபோதே இவ்வாறு திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது. இதையடுத்து அந்தப் பகுதியில் நின்ற பொதுமக்களின் முயற்சியால் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (ம-110)

# பல்கலை விண்ணப்பத்துக்கு இணுவிலில் நிகழ்நிரல் வசதி

யாழ்ப்பாணம். ஏப்.30

2025 /2026 கல்வி ஆண்டுக்குரிய பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விண்ணப்பங்களைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனமான இணுவில் பொதுநூலகத் தகவல்தொழில்நுட்ப மையத்தில்பெற்று நிகழ்நிரல் மூலம் விண்ணப்பிப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை விண்ணப்பிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேலதிக தகவல்களுக்கு 0212054435, 0212241930, 0770737919, 0768851815 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு

08 . 04 . 1939



மறைவு

27 . 04 . 2026

எமது ஸ்தாபனத்தில் நீண்டகாலமாக பணியாற்றிய
முருகாதாஸ் (கண்ணன்) அவர்களின் அன்புத் தாயார்.

**அமரர் இந்திரமலர் தியாகராசா**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்

**ரூபி ஜுவல்லறி உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்**

## அரசாங்க அறிவித்தல்
## பகிரங்க ஏல விற்பனை
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 09.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது172) பெற்று அன்றைய தினம் மாலை 04.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

வருடாந்த ஏல விற்பனை-2026

| இல | அலுவலகம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1 | பிரதேச செயலகம் பருத்தித்துறை | 07.05.2026 (வியாழக் கிழமை) | மு.ப 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 2 | பிரதேச செயலகம் கரவெட்டி | 07.05.2026 (வியாழக் கிழமை) | மு.ப 11.00 | பி.செ கரவெட்டி |
| 3 | பிரதேச செயலகம் தெல்லிப்பளை | 08.05.2026 (வெள்ளிக்கிழமை) | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 4 | பிரதேச செயலகம் உடுவில் | 08.05.2026 (வெள்ளிக்கிழமை) | மு.ப 11.00 | பி.செ உடுவில் |
| 5 | பிரதேச செயலகம் நெடுந்தீவு | 08.05.2026 (வெள்ளிக்கிழமை) | மு.ப 09.30 | பி.செ நெடுந்தீவு |
| 6 | பிரதேச செயலகம் காரைநகர் | 11.05.2026 (திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 7 | பிரதேச செயலகம் சங்கானை | 11.05.2026 (திங்கட்கிழமை) | மு.ப 10.30 | பி.செ சங்கானை |
| 8 | பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் | 11.05.2026 (திங்கட்கிழமை) | மு.ப 11.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 9 | பிரதேச செயலகம் வேலணை | 12.05.2026 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ வேலணை |
| 10 | பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை | 12.05.2026 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 11 | பிரதேச செயலகம் மருதங்கேணி | 13.05.2026 (புதன் கிழமை) | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 12 | பிரதேச செயலகம் சாவகச்சேரி | 13.05.2026 (புதன் கிழமை) | மு.ப 11.30 | பி.செ சாவகச்சேரி |
| 13 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 14.05.2026 (வியாழக் கிழமை) | மு.ப 09.30 | பி.செ யாழ்ப்பாணம் |
| 14 | பிரதேச செயலகம் கோப்பாய் | 14.05.2026 (வியாழக் கிழமை) | மு.ப 10..30 | பி.செ கோப்பாய் |
| 15 | பிரதேச செயலகம் நல்லூர் | 14.05.2026 வியாழக் கிழமை) | மு.ப 11.30 | பி.செ நல்லூர் |
| 16 | மாவட்டச் செயலகம்-யாழ்ப்பாணம் | 15.05.2026 (வெள்ளிக்கிழமை) | மு.ப 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

ம.பிரதீபன்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
யாழ் மாவட்டம்

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு
## வழிபடுநர் பேரவைப்பொதுக்கூட்டம் 2026



**(ஊர்காவற்றுறை நீதிமன்றின் TR41/25 வழக்கின் கட்டளையின் பிரகாரம்) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவைப் பொதுக்கூட்டம்.**

இடம் :- புவனேஸ்வரி திருமணமண்டபம் (ஆலய வளாகம்)
காலம் :- 10.05.2026 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- மு.ப.10.00 மணி

**தலைவர் திரு. கு.சரவணபவானந்தன் JP அவர்கள்**
**(தலைவர் - அறங்காவலர்சபை)**

2026ஆம் ஆண்டு வழிபடுநர் பேரவை உறுப்புரிமை பெற்றவர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

**நிகழ்ச்சி நிரல்**

- தேவாரம்
- தலைமையுரை
- வழிபடுநர் பேரவை உறுப்புரிமை ஐயப்பாட்டு விண்ணப்பங்கள் பரிசீலனை
- செயலாளர் சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்.
- செயலாளர் 2025ஆம் ஆண்டு அறிக்கை வாசித்தலும் அங்கீகரித்தல்.
- பொருளாளர் கணக்கறிக்கை சமர்பித்தலும், அங்கீகரித்தலும். (2023,2024,2025)
- புதிய அறங்காவலர்கள் தெரிவு.
- பிறவிடயங்கள்
- நன்றியுரை
- தேவாரம்

நன்றியுடன்

**மதியாபரணம் அம்பிகைபாகன்**
**கௌரவ செயலாளர்,** **தொலைபேசி இல:- 0214323440**
**அறங்காவலர்சபை**

பொதுக்கூட்ட அறிவித்தல் வழிபடுநர் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- பொதுக்கூட்டத்திற்கு வரும் போது இக்கடிதம் கொண்டு வருமாறு கேட்டு கொள்கிறேன்.
- அறங்காவலர் தெரிவில் வேட்பாளராக நிற்க விரும்புவோர் தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்கான உறுப்புரிமை இருத்தல் வேண்டும். இதனை சரியான முறையில் நடைமுறைப்படுத்த ஆலய அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் வேட்பு மனுத்தாக்கல் படிவத்தை பூர்த்தி செய்து 05.05.2026ஆம் திகதி பி.ப.5.00 மணிக்கு முன் அலுவலகத்தில் உள்ள பெட்டியில் சேர்க்கவும் இவ் விண்ணப்பம் சமர்ப்பிக்காதவர்கள் அறங்காவலர் தெரிவில் இடம்பெறமாட்டார்கள் என்பதையும் தெரிவிக்கிறேன். அங்கத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கோருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

*அரச நிதியில் மோசடி*

# ஜூலை மாதத்துக்கு முன்னர் ரணிலுக்குக் குற்றப்பத்திரம்

கொழும்பு, ஏப். 30

நிதி மோசடி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான குற்றப்பத்திரம் ஜூலை மாதத்துக்கு முன்னர் தாக்கல் செய்யப்படும் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க வளங்களைத் தவறாகப் பயன்படுத்தியமை மற்றும் பொது நிதியை முறைகேடு செய்தமை ஆகிய முறைப்பாடுகள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்கின் தற்போதைய நிலைமையை ஆராய்ந்த நீதவான், ஜூலை மாதம் 8ஆம் திகதிக்கு வழக்கைத் தவணையிட்டார். வழக்கின் முன்னேற்ற அறிக்கையை அன்றைய தினம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதவான் அறிவுறுத்தினார்.

இதையடுத்தே, ஜூலை மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ரணிலின் மனைவி மைத்திரியை இந்த விவகாரம் தொடர்பில் சந்தேகநபராகப் பெயரிடுவதா? இல்லையா? என்பது தொடர்பில் அதிகாரிகள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ம)

## விபத்தில்...

ரிழந்தார். மாங்குளத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கண்ணன் (வயது-46) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த 6ஆம் திகதி மாங்குளத்தில் இருந்து மல்லாவி நோக்கிச் செல்லும்போது அவர் விபத்துக்கு உள்ளாகியிருந்தார். முதற்கட்ட சிகிச்சைக்குப் பின் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே, மேலதிக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## சந்தேகத்துக்குரிய...

அரியாலை - செம்மணிப்புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வின் மூன்றாம் நாளான நேற்றையதினமே இந்தச் சர்ச்சைக்குரிய மண் படுக்கைகள் அவதானிக்கப்பட்டு அவை தொடர்பில் தற்போது ஆய்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கறுப்பு நிறத்தில் சந்தேகத்துக்கு இடமான மண்படுக்கைகள் அவதானிக்கப்பட்ட நிலையில், அதற்குக் கீழ் ஏதாவது சான்றுப் பொருள்கள் அல்லது என்புத் தொகுதிகள் உள்ளனவா என்று தெளிவான முடிவுக்கு வருவதற்காக மண் மாதிரி வெட்டி எடுக்கப்பட்டு அரித்து ஆய்வுக்கு உட்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நீதவான் எஸ்.லெனின்குமார் மற்றும் நீதிபதி உசைன் ஆகியோர் அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ரணித்தா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோர் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அர்ச்சுனா...

மன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கும், மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் காணிப்பிணக்கு நிலவிவரும் நிலையில், கடந்த 25ஆம் திகதி குறித்த காணிக்குள் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் மற்றைய தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டிருந்தது. வாக்குவாதம் முற்றிய நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மீது அந்தப் பெண்கற்களால் தாக்குதல் நடத்தினார் என்றும், அந்தப் பெண்ணை அர்ச்சுனா துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினார் எனவும் கூறப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இருவரும் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். வழக்கு நேற்றைய தினம் மீள விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் அவர்கள் இருவரையும் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்தது.

இந்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சார்பில் சட்டத்தரணி கௌதமனும், மற்றைய பெண் சார்பில் சட்டத்தரணி மணிவண்ணனும் நீதிமன்றத்தில் முன்னிலையானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ரஷ்ய...

கைக்கு வரவுள்ளனர். இந்தப் பயணத்தின்போது ரஷ்ய சுகாதார அமைச்சர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் இலங்கையின் அரச உயர்மட்டப் பிரதானிகளைச் சந்தித்து இருதரப்புக் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர். அத்துடன், கொழும்பு தேசிய மருத்துவமனை மற்றும் கொழும்பு பல்கலைக் கழகம் ஆகிவற்றை அவர்கள் பார்வையிடவுள்ளனர்.

ரஷ்ய அதிகாரிகளின் இந்தப் பயணத்தின்போது, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், மருத்துவ நிபுணர்களுக்கான பயிற்சிகள், கல்வி சார் ஒத்துழைப்புகள் (பரிமாற்றத் திட்டங்கள்), ஆயுள்வேத மருத்துவத் துறை மற்றும் சுகாதார சேவை ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பில் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம)

## திஸ்ஸ...

இடம்பெறவுள்ளது. தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்குமாறு வலியுறுத்தியும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பாதிக்கப்பட்ட பொது மக்களுடன் இணைந்து மாதாமாதம் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாகவே, இன்றும், நாளையும் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரையும், பௌர்ணமி நாளான நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரையும் இந்தத் தொடர் போராட்டம் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-26-66)

## நாடாளுமன்ற...

அச்சுறுத்தியமை தொடர்பான வழக்கு விசாரணைக்குப் பின்னர், ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சட்டத்தரணி வி.மணிவண்ணன் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு எதிராக பல்வேறு குற்றவியல் வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. எனவே, அவர் துப்பாக்கி வைத்திருப்பதற்கு அனுமதிக்க முடியாது. இவர் இதற்கு முன்னரும் பல இடங்களில் துப்பாக்கி சார்ந்த மிரட்டலை விடுத்துள்ளார். எனவே, அவருக்கு எதிரான விளக்கமறியலை நீடிக்குமாறு கோரினேன். எனினும், விளக்கமறியலை நீடிக்க வேண்டிய தேவையில்லை எனவும், தமது விசாரணைகள் முடிவடைந்து விட்டன என்றும் இளவாலை பொலிஸார் கூறியதற்கு அமைய அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும், அவரது துப்பாக்கி சான்றுப் பொருளாக நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் துப்பாக்கி அனுமதி தொடர்பில் மேலதிக அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு மன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது - என்றார். (அ-ம-26)

## நாடாளுமன்றத்துக்கு...

ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

திறைசேரியில் இடம்பெற்ற 2.5 மில்லியன் டொலர் மோசடி தொடர்பில் நாடாளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மே மாதம் 5ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகும் நிலையில், அன்றையதினம் இந்த விடயம் தொடர்பான தெளிவுபடுத்தல் வழங்கப்படும் - என்றுள்ளது. (அ-ம)

## வடமேற்குப்...

வது:-

செம்மணிப் புதைகுழியின் வடமேற்குப் பகுதியில் சில என்புத் தொகுதிகள் இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும், எத்தனை என்புத் தொகுதிகள் எவ்விதமான முறையில் இருக்கின்றன என்று இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

சுத்தப்படுத்தல் நடவடிக்கைக்குப் பின்னரே அது தொடர்பில் தெரிவிக்க முடியும் - என்றார். (அ-ம-26)

## செம்மணிப்...


செம்மணிப் புதைகுழி மீதான அகழ்வுப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் நாளான நேற்று, ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டிருந்த இரு என்புத் தொகுதிகளின் சிதிலங்கள் மீட்கப்பட்டன. அவை நீதிமன்றக் கட்டுக்காவலில் ஒப்படைக்கப்பட்டன. (அ-ம-26)

## மே 5...

உரையாற்றவுள்ளார். சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நாடாளுமன்றவிவகாரக்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே, இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பைஇந்தியன்ஸுக்கு முறையானகவனிப்பு!



## இமாலய இலக்கை எட்டியது ஹைதராபாத்



**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் நியமித்த 244 ஓட்டங்கள் என்ற இலக்கை இலகுவாக எட்டிப்பிடித்து வெற்றிபெற்றது ஹைதராபாத்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன் படி அந்த அணி 20 ஓவர்களில் 5 விக் கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்க ளைப் பெற்றது. அதிகபட்சமாக ரிகில்டன் 123 ஓட்டங்களையும், வில் ஜக்ஸ் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணி ஆரம்ப வீரர்களான ஹெட் மற்றும் அபிஷேக்கின் இணைப்பாட்டத்தால் ஆரம்பத்திலேயே பலமான நிலையை அடைந்தது. ஹெட் 76 ஓட்டங்களையும், அபிஷேக் சர்மா 45 ஓட்டங்களையும் குவித்து ஆட்டமிழந்த போதிலும், கிளா சன் மற்றும் அரோரா ஆகியோர் அதிரடி யைத் தொடர அந்த அணி 8 பந்துகள் மீதமிருக்கையில் அபார வெற்றிபெற்றது. (ம)

# 'அஸ்வெசும' பயனாளிகள் தெரிவுக்கு தொழில்நுட்பம்!

கொழும்பு, ஏப். 30

'அஸ்வெசும' நலன்புரிப் பயனாளிகளைத் துல்லியமாக இனங்காண்பதற்கும், பட்டியல் தயாரிக்கும் பணிகளை அதிக வினைத்திறனுடனும் துல்லியமாகவும் மேற்கொள்வதற்கும் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசேட கலந்துரையாடல் நிதி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தற்போது நடைமுறையிலுள்ள பயனாளிகளை இனங்காணும் முறையிலுள்ள அளவுகோல்களைத் திருத்தியமைத்தல், பணிகளை விரைவுபடுத்துதல் மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயனாளிகளைத் துல்லியமாக இனங்காண்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், சட்டத் திருத்தங்களை மேற்கொள்வது போன்ற நீண்டகால நடவடிக் கைகளுடன், குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய தீர்வுகளை இனங் காண்பது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன், வெற்றிடங்களை நிரப்புதல், கிராம உத்தியோகத்தர்களை செயலில் ஈடுபடுத்துதல், கொடுப்பனவு முறைகளைத் திருத்தியமைத்தல் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. (ச-இ)

# தொழிலாளர் தினத்தில் விடுமுறைவழங்குக!

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 30

சர்வதேச தொழிலாளர் தினமான மே மாதம் முதலாம் திகதி சாவகச்சேரி வர்த் தக நிலையங்களைப் பூட்டி ஊழியர்க ளுக்கு விடுமுறை வழங்குமாறு சாவகச் சேரி கைத்தொழில் வணிகர் மன்ற தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சித்திரைப் பௌர்ணமி, ஆடி அமா வாசை விரதநாள்கள் மற்றும் தொழிலா ளர் தினம் ஆகியவற்றிற்கு வர்த்தக நிலையங்களை மூடுவதாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வரு டாந்த பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இந்தக் கோரிக்கையை விடுப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார். (ம-28)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி சந்தியில் பிரதான வீதியில் 40 நிலபரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான காப்பற் வீதி முகப்புடன் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு பரப்பு 1,200,000/= (பன்னீரெண்டு) இலட்சம்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நடுப்பகுதி ஒரு பரப்பு எட்டு இலட்சம் ரூபாய். பின் பின் பகுதி ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம் ரூபாய்.
- யாழ் நகரிலிருந்து 4 km தூரம்
- வீடுகள் அமைப்பதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் சிறந்த இடம்.

தொடர்பு:- 076 99 03 039
076 98 78 617

(CS 31707) A

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 றோட்டில் இருந்து 100m தூரம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்
- சகல ஆவணங்களுடன் நீண்ட கால தோம்புடன் நிலப்பரப்பு.
- பார்வையிடும் நேரம் : காலை 8.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை


தொடர்பு:- 077 6234 204

(CS 31708)A


## மரண அறிவித்தல்

பிறப்பு:01.10.1937 இறப்பு:29.04.2026

**குழந்தைவேலு வைரவநாதர்**



அராலி மத்தியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குழந்தை வேலு வைரவநாதர் அவர்கள் நேற்று (29.04.2026) இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் அராலி மத்தியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று (30ஆம் தேதி) மதியம் 11.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, அராலி பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
077 103 7462 குடும்பத்தினர்.

(CS 31709) A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.